19th October, 2021

To

The Manager - Listing,
BSE Limited,
Rotunda Building,
Phiroze Jeejeebhoy Towers,
Dalal Street,
Mumbai - 400 001
Scrip Code: 543276

The Manager - Listing,
National Stock Exchange of India Limited,
Exchange Plaza,
Bandra Kurla Complex ,
Bandra (East),
Mumbai - 400 051
Stock Code: CRAFTSMAN

Dear Sir/Madam,

**Sub: Intimation of publication of the Financial Results in the newspaper as per Regulation 47 of the SEBI (Listing Obligation and Disclosure Requirements) Regulations, 2015**

We wish to inform you that pursuant to Regulation 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, the newspaper advertisement published by the Company relating to financial results for the quarter and half year ended 30th September, 2021 in the English newspaper (The Hindu BusinessLine) and Regional (Tamil) newspaper (Dinamani) on 19th October, 2021 are enclosed for your records.

Kindly note that we will also upload this information on the Company's website, at www.craftsmanautomation.com.

Kindly take the same into your records.

Thanking you.

Yours faithfully,
**for CRAFTSMAN AUTOMATION LIMITED**

CRAFTSMAN AUTOMATION LIMITED SENTHEL TOWERS 4th FLOOR 1078, AVANASHI ROAD COIMBATORE-18

Shainshad Aduvanni
**Company Secretary & Compliance Officer**

Encl: As above

Registered Office:
Senthel Towers, 4th Floor
1078, Avanashi Road
Coimbatore - 641 018
Tamilnadu, India

tel +91 422 71 650 00
fax +91 422 71 650 56
info@craftsmanautomation.com
www.craftsmanautomation.com

L28991TZ1986PLC001816
33AABCC2461K1ZW

# FMCG majors expect to report ‘strong’ Q2

Rural demand resilient, improvement seen in modern trade across urban markets

**ABHISHEK LAW**
Kolkata, October 18

FMCG majors are expected to report a set of strong Q2 numbers with rural demand remaining resilient, good kharif crops and progressive improvement in modern trade across urban markets. Out-of-home consumption and sales of discretionary items have picked up, but it is yet to reach the pre-Covid levels.

Cigarette volumes are expected to improve on a softer base (of Q2 FY21). However, companies could face margin pressure because of rising raw material costs, say analysts tracking the sector.

“In Q2 FY22, rural demand remained resilient, while urban demand, including modern trade, is starting to recover. Discretionary and out-of-home segments are showing good pick-up, but it is not yet back to the 2019 levels. The health and hygiene segment is likely to slow down,” said analyst firm Edelweiss in a report, adding that demand sentiment is likely to improve in Q3 on the back of festival demand.

Godrej Consumer Products, in a stock market notification, had previously said that it expected “close to double-digit sales growth”, while broad-based sales growth was witnessed in the home care and personal care categories.

“Since rural markets have remained resilient on the back of a strong kharif crop, good rabi sowing, and the



monsoons ahead of their long-period averages, staples’ demand is also likely to be healthy,” said Motilal Oswal in its report, adding that as vaccination continues and daily case numbers remain subdued, “discretionary companies are set to witness continued demand momentum”. “Q2 FY22 is likely to report strong cumulative growth numbers, 15 per cent on the topline, 10 per cent on EBITDA, and 10 per cent on PAT,” it said, referring to the companies it tracks.

According to the firm, “a large portion of growth is likely to come from pent-up demand for discretionary items”.

## Out-of-home categories

With rising mobility, discretionary categories such as skin care, cosmetics, hair colour and juices are witnessing an uptick, while liquor and cigarettes may show good year-on-year growth on a soft base.

Analysts claim that cigarette volumes for ITC are expected to witness growth in the 10-12 per cent range over the same period last fiscal (Q2 FY21). Profitability pressures are likely to ease due to recovery in the high-margin cigarettes business as well as improved performance in the hotels business, Motilal Oswal added.

Health supplements (honey and Chyawanprash), hygiene products and premium edible oil could see some slow down.

## Raw material costs

Although companies took price hikes in raw material costs and passed on a portion of it following improvement in demand, analysts say gross margins are likely to remain under pressure. Significant improvement is likely only in Q3 FY22.

Edelweiss V-P, Abneesh Roy, pointed out that he expects a year-on-year dip in gross margins for most companies.

According to Edelweiss’ report, HUL has taken one more calibrated hike in Q2 in the skin care and laundry segments. Most other staples companies have also taken calibrated price hikes. Paint companies have taken an additional 2 per cent price hike, taking their total annual price hike to 6 per cent.

The prices of raw materials of crude derivatives, which affect packaging / hair oil companies, have also seen an increase of 22-33 per cent year-on-year. Palm oil prices were on the higher side, while that of barley and wheat prices rose sequentially.

“In addition to gross margin pressure, higher ad spends year-on-year have resulted in estimated cumulative EBITDA growth of 10 per cent. The EBITDA margins are expected to decline or remain flat for almost all companies in our coverage universe,” said Motilal Oswal.

EUL FOR COVAXIN

# WHO technical advisory group to meet on Oct 26

**G NAGA SRIDHAR**
Hyderabad, October 18

The Technical Advisory Group (TAG) of the World Heath Organization (WHO) will meet on October 26 to consider Emergency Use Listing (EUL) for Covaxin, the Covid vaccine of Bharat Biotech.

“The technical advisory group will meet on October 26 to consider EUL for Covaxin. WHO has been working closely with Bharat Biotech to complete the dossier,” said Soumya Swaminathan, Chief Scientist, WHO, in a social-media post.

“Our goal is to have a broad portfolio of vaccines approved for emergency use and to expand access to populations everywhere,” she said.

In response, Suchitra Ella, Joint Managing Director, Bharat Biotech, said: “We believe our efforts to make Covaxin achieve EUL will be soon realised with regulatory compliances, enable further access of pandemic vaccines to the world.”

In a briefing last week, WHO representatives said the Strategic Advisory Group of Experts (SAGE) on Immunisation of the WHO had reviewed Bharat Biotech’s Covaxin and a policy recommendation would be issued when the vaccine is in Emergency Use listed by the WHO.

## Two stages of evaluation

The process of EUL mainly consists of two stages of evaluation by SAGE and TAG. While SAGE issues evidence-based policy recommendations for the best use of vaccines against Covid, TAG will carry out a risk-benefit assessment and come to a final decision whether to grant EUL to the vaccine.

## The Kings’ obeisance



N Srinivasan, Vice-Chairman and MD, The India Cements Ltd, and Rupa Gurunath, Whole Time Director, with the IPL 2021 cup which Chennai Super Kings won, at the TTD temple in Chennai BIJOY GHOSH

# India has record stockpiles of Covid vaccines

**REUTERS**
New Delhi, October 18

India’s vaccination campaign has slowed despite amassing record stockpiles of vaccines, Health Ministry data showed on Monday, as authorities maintain a wider-than-usual gap between doses in a strategy that has boosted coverage.

Domestic production of the AstraZeneca vaccine, which accounts for nearly 90 per cent of administered doses, has more than tripled since May, when a supply shortage prompted India to double the period between doses to between 12 and 16 weeks.

That gap, exceeding the 8 to 12 weeks recommended by the WHO, has allowed the country to give at least one vaccine dose to 74 per cent of its 944 million adults, with just 30 per cent getting the full complement of two.

The AstraZeneca vaccine, known as Covishield, accounts for 861 million doses of the total injected figure of 977.6 million, while its other main vaccine, Covaxin, has a dose interval of four to six weeks.

## Daily vaccinations

Over the last few days, daily stocks of all Covid vaccines have exceeded 100 million doses, the Health Ministry figures show, for States and Union Territories.

In contrast, daily vaccinations have dropped to an average of 5 million doses this month and even less in the past week, off a daily peak of 25 million last month.

The Ministry said it followed recommendations



from a group of experts in making any changes to dosage, arrived at by weighing up scientific and empirical evidence.

“The National Technical Advisory Group on Immunisation is actively considering the matter of dose interval between Covishield doses,” said its spokesperson.

However, vaccine supply alone should not determine the gap, said Chandrakant Lahariya, a physician and epidemiologist in New Delhi. “There is no scientific rationale for reducing the gap,” he added.

“In fact, retaining this gap has the possibility of giving stronger protection and longer-lasting immunity.”

Government officials have said they are trying to encourage more of those who are still unvaccinated to get inoculated.

## ‘More logical, scientific’

A 12-week gap was more logical and scientific for vaccinations drives such as those in India, where some studies have shown many people already had antibodies against Covid, said Lahariya.

In July, the studies estimated that more than two-thirds of Indians already had antibodies, mainly through natural infection.

# Mixing vaccines highly effective against Covid: Study

‘Greater risk reduction for those who got an mRNA vax after vector-based jab’

**PRESS TRUST OF INDIA**
London, October 18

People who received a first dose of the Oxford-AstraZeneca Covid vaccine followed by an mRNA vaccine shot had a lower risk of infection compared to those immunised with both doses of the AstraZeneca preventive, according to a nationwide study in Sweden.

## Safety concerns

Since the use of AstraZeneca’s vector-based vaccine against Covid was halted for people younger than 65 years of age due to safety concerns, all individuals in Sweden who had already received their first dose of this vaccine were recommended an mRNA vaccine as their second dose.

“Having received any of the approved vaccines is better compared to no vaccine, and two doses are better than one,” said Peter Nordstrom, a professor at Umea University, Sweden.

“However, our study shows a greater risk reduction for people who received an mRNA vaccine after having received a first dose of a vector-based, compared to people having received the vector-based vaccine for both doses,” said Nordstrom.



The study, published in *The Lancet Regional Health*, on Monday, is based on nationwide registry data from the Public Health Agency of Sweden, the National Board of Health and Welfare, and Statistics Sweden. In the main analysis, about 700,000 individuals were included.

During a 2.5-month average follow-up period after the second dose, the study showed a 67 per cent lower risk of infection for the combination of AstraZeneca and Pfizer vaccine shots.

There was a 79 per cent lower risk of infection for AstraZeneca and Moderna vaccine shots, compared to unvaccinated individuals, said the researchers.

For people having received two doses of the AstraZeneca vaccine, known as Covishield in India, the risk reduction was 50, they said.

These risk estimates were observed after accounting for differences regarding date of vaccination, age of the participants, socio-economic status, and other risk factors for Covid.

## Delta variant

The researchers noted that the study estimates of effectiveness apply to infection with the Delta variant, which was dominating the confirmed cases during the follow-up period.

“The results of the study may have implications for vaccination strategies in different countries,” said Marcel Ballin, doctoral student at Umea University, and co-author of the study.

“The World Health Organization has stated that despite the promising results from previous studies regarding immune response from mix-and-match vaccination, there is a need for larger studies to investigate their safety and effectiveness against clinical outcomes. Here we now have one such study,” said Ballin.


# Maharashtra to extend timings of shops

**OUR BUREAU**
Pune, October 18

Maharashtra Chief Minister Uddhav Thackeray, on Monday, announced that the State government would issue Standard Operating Procedures (SOPs) to extend the timings of shops and restaurants as the number of Covid cases are on the decline.

However, Thackeray also warned that even as the second wave has receded, the danger of the third wave still prevails. He appealed to people to follow Covid norms.

“Slowly we are relaxing restrictions as the number of patients is on the decline. From October 22 we will open multiplex and theatres. There is a consistent demand to extend timings of shops and restaurants,” said Thackeray at a meeting of the Covid Task Force members in Mumbai.




Craftsman AUTOMATION

CRAFTSMAN AUTOMATION LIMITED

CIN: L28991TZ1986PLC001816
Regd. office: “Senthel Towers” IV[th] Floor, 1078, Avanashi Road, Coimbatore - 641 018, Tamilnadu.
Tel: 0422 - 7165000, Fax: 0422 - 7165056, Website: www.craftsmanautomation.com,
Email: investor@craftsmanautomation.com

**1. Extract from the Unaudited Consolidated Financial Results of Craftsman Automation Limited for the quarter and half year ended 30[th] September, 2021**

(Rs. in Lakhs except per share data)

| Sr. No. | Particulars | Quarter Ended | | | Half Year ended | | Year ended |
|---|---|---|---|---|---|---|---|
| | | 30-Sep-2021 | 30-Jun-2021 | 30-Sep-2020 | 30-Sep-2021 | 30-Sep-2020 | 31-Mar-2021 |
| | | Unaudited | Unaudited | Unaudited | Unaudited | Unaudited | Audited |
| 1 | Total Revenue from Operations | 57,101 | 43,519 | 37,072 | 1,00,620 | 53,372 | 1,55,995 |
| 2 | Net Profit / (Loss) (before Tax & Exceptional items) | 7,654 | 3,657 | 3,442 | 11,311 | 992 | 14,876 |
| 3 | Net Profit / (Loss) before Tax (after Exceptional items) | 7,654 | 3,657 | 3,442 | 11,311 | 992 | 14,876 |
| 4 | Net Profit / (Loss) (after Tax & Exceptional items) | 4,996 | 2,407 | 2,283 | 7,403 | 660 | 9,736 |
| 5 | Total Comprehensive Income [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | 5,140 | 2,382 | 2,349 | 7,522 | 524 | 10,221 |
| 6 | Share Capital | 1,056 | 1,056 | 1,006 | 1,056 | 1,006 | 1,056 |
| 7 | Reserves (excluding Revaluation Reserves) as shown in the Audited Balance Sheet | | | | | | 90,345 |
| 8 | Earnings Per Share Basic & Diluted (Face Value of Rs. 5/- each) (Not Annualised) | | | | | | |
| | - Basic Rs. | 23.65 | 11.39 | 11.35 | 35.04 | 3.28 | 48.32 |
| | - Diluted Rs. | 23.65 | 11.39 | 11.35 | 35.04 | 3.28 | 48.32 |

**2. Extract from the Unaudited Standalone Financial Results of Craftsman Automation Limited for the quarter and half year ended 30[th] September, 2021**

(Rs. in Lakhs except per share data)

| Sr. No. | Particulars | Quarter Ended | | | Half Year ended | | Year ended |
|---|---|---|---|---|---|---|---|
| | | 30-Sep-2021 | 30-Jun-2021 | 30-Sep-2020 | 30-Sep-2021 | 30-Sep-2020 | 31-Mar-2021 |
| | | Unaudited | Unaudited | Unaudited | Unaudited | Unaudited | Audited |
| 1 | Total Revenue from Operations | 56,884 | 43,165 | 36,676 | 1,00,049 | 52,615 | 1,54,629 |
| 2 | Profit before tax | 7,586 | 3,509 | 3,647 | 11,095 | 1,106 | 14,756 |
| 3 | Profit after tax | 4,941 | 2,284 | 2,498 | 7,225 | 795 | 9,676 |
| 4 | Total Comprehensive Income | 5,138 | 2,181 | 2,533 | 7,319 | 597 | 10,112 |

3. The above is an extract of the detailed format of Quarterly and Half yearly Financial Results filed with the Stock Exchanges on 18[th] October, 2021 under Regulation 33 of the SEBI (Listing obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly and Half yearly Financial Results are available on the company website, www.craftsmanautomation.com and on the websites of the Stock Exchange(s) i.e. www.bseindia.com and www.nseindia.com.

For **CRAFTSMAN AUTOMATION LIMITED**

Date : 18 October, 2021
Place : Coimbatore

**Srinivasan Ravi**
Chairman and Managing Director

# VI teams up with L&T for 5G smart city trials

**PRESS TRUST OF INDIA**
New Delhi, October 18

Telecom operator Vodafone Idea (VIL) and Larsen and Toubro (L&T) have joined hands for a pilot project to test 5G-based smart city solutions, according to a statement.

This is part of the ongoing 5G trials on government-allocated spectrum. Announcing the collaboration in a joint statement, the companies said the pilot project would be set up in Pune on government-allocated 5G spectrum to visualise and analyse smart city applications.

The companies will collaborate to test and validate 5G use cases built on Internet of Things, Video AI technologies leveraging L&T’s Smart City platform.

Vodafone Idea’s Chief Enterprise Business Officer, Abhijit Kishore, said: “The advent of 5G technology opens whole new opportunities to address challenges of urban growth and provide end-to-end solutions to support sustainable creation of smart cities in the future.”

# Facebook ‘on track’ for surge in advertising during holiday season

But supply-chain disruptions have complicated retailers’ plans


**BLOOMBERG**
October 18

Facebook is expecting a record level of advertising during the upcoming holiday season despite supply-chain disruptions that have complicated retailers’ plans, according to a senior executive.

“All industries are seeing supply-chain disruptions at the moment and it’s impacting in different ways,” said Nicola Mendelsohn, Global Business Group Vice-President.

“At the moment it’s very much square on for the busiest holiday period of the year, and also what is likely to be the biggest online marketing period that we’ve ever seen.”

After seeing advertising



drop off during the start of the pandemic, ad agencies have seen a resurgence in spending as economies reopen.

## Delays in shipping

However, delays in shipping, production and staffing shortages are already hurting expectations for the crucial holiday season, leading some firms to cut sales forecasts.

# Plans to hire 10,000 in the EU

**ASSOCIATED PRESS**
California, October 18

Facebook says it plans to hire 10,000 workers in the European Union over the next five years to work on a new computing platform.

The company said in a blog post that those high-skilled workers will help build the metaverse, a futuristic notion for connecting people online that encompasses augmented and virtual reality.

Facebook executives have been touting the metaverse as the next big thing after the mobile internet as they also contend with other matters such as antitrust crackdowns, the testimony of a whistleblowing former employee, and concerns about how the company handles vaccine-related and political misinformation.

In a separate blog post, the company defended its approach to combating hate speech, in response to a *Wall Street Journal* article that examined the company’s inability to detect and remove violent posts.

தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு
கோவை : 94425 04160, 97902 12447, 73730 55255
திருப்பூர் : 95975 73230, 99428 33477
பொள்ளாச்சி & உடுமலை : 90435 00177
ஈரோடு : 95666 00225, 99428 33477
நீலகிரி : 94888 04141
உதவி மைய எண் : 88070 00216

தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்புகொள்ள
கோவை 94425–04156
மேட்டுப்பாளையம் 94878–42563
பெ.நா.பாளையம் 98425–63953
சூலூர் 98422–44599
அன்னூர் 91502–49095
பொள்ளாச்சி 89034–44119
மதுக்கரை 73735–45727
வால்பாறை 94863–24619

# வால்பாறையில் கனமழை: மரம் விழுந்து போக்குவரத்து பாதிப்பு



முழு கொள்ளளவுடன் காட்சியளிக்கும் சோலையாறு அணை.

**வால்பாறை, அக். 18:** கனமழை காரணமாக வால்பாறை எஸ்டேட் பகுதிகளில் மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

வால்பாறை வட்டாரத்தில் கடந்த ஒருவார காலமாக பரவலாக மழை பெய்து வருகிறது. கடந்த இரு நாள்கள் இடைவிடாது தொடர்ந்து பெய்த மழையால் கடுங்குளிர் நிலவுகிறது. அனைத்து ஆறுகளிலும் நீர் பெருக்கெடுத்து ஓடுவதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

வால்பாறையை அடுத்த உருளிக்கல் எஸ்டேட் பகுதியில் திங்கள்கிழமை சாலையில் விழுந்த மரத்தால் சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிப்படைந்தது. பெரியார் நகர் எஸ்டேட் பகுதியில் சாலையோரம் மண் சரிவு ஏற்பட்டதால் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

திங்கள்கிழமை காலை 6 மணியுடன் முடிவடைந்து கடந்த 24 மணி நேரத்தில் வால்பாறை வட்டாரத்தில் சோலையாறு அணையில் அதிகபட்சமாக 115 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மற்ற பகுதிகளில் மழை விவரம் (மில்லி மீட்டரில்): அப்பர் நீராறு 103, லோயர் நீராறு 81, வால்பாறை 71. 164 அடி உயரம் கொண்ட சோலையாறு அணைக்கு விநாடிக்கு 1,592.28 கனஅடி நீர்வரத்து இருந்தது. 3,291 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வரும் நிலையில் இந்த ஆண்டு 4ஆவது முறையாக அணையின் நீர்மட்டம் 161.09 அடியாக உயர்ந்து நிரம்பியது.

# பட்டாசுக் கடைக்கு உரிமம் பெற அவகாசம் நீட்டிப்பு

**கோவை, அக். 18:** கோவை மாவட்டத்தில் தற்காலிக பட்டாசுக் கடைக்கு உரிமம் பெற அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகை வரும் நவம்பர் 4ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

கோவை மாவட்டத்தில் (மாநகர பகுதிகளைத் தவிர்த்து) தீபாவளி பண்டிகைக்காக தற்காலிக பட்டாசுக் கடைகள் அமைத்து நடத்த விருப்பம் உள்ளவர்களிடம் கடந்த செப்டம்பர் 1ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை இணையவழியில் விண்ணப்பம் பெறப்பட்டது.

இந்த நிலையில் தற்காலிக பட்டாசுக் கடைகளுக்கு கால அவகாசம் வரும் 22ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் தீபாவளி தற்காலிக பட்டாசுக் கடை அமைத்து நடத்த விருப்பமுள்ளவர்கள் வரும் 22ஆம் தேதிக்குள் இணையவழியில் விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று கோவை மாவட்ட ஆட்சியர் ஜி.எஸ்.சமீரன் தெரிவித்துள்ளார்.

# இசையமைப்பாளர் சங்கர் கணேஷ், எழுத்தாளர் போகன்சங்கருக்கு கண்ணதாசன் விருது




இசையமைப்பாளர் சங்கர் கணேஷ், எழுத்தாளர் போகன் சங்கர் ஆகியோருக்கு கண்ணதாசன் விருதை வழங்குகிறார் கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவன தலைவர் கிருஷ்ணன். உடன், மரபின்மைந்தன் முத்தையா, இயக்குநர் சுகா உள்ளிட்டோர்.

**கோவை, அக். 18:** கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இசையமைப்பாளர் சங்கர் கணேஷ், எழுத்தாளர் போகன்சங்கர் ஆகியோருக்கு கண்ணதாசன் விருது வழங்கப்பட்டது.

கோவை கண்ணதாசன் கழகம், ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் ஆகியன இணைந்து ஆண்டுதோறும் கவிஞர்கள், எழுத்தாளர்கள், பாடலாசிரியர்கள், பாடகர்கள், இலக்கியவாதிகள் உள்ளிட்ட ஆளுமைகளைத் தேர்ந்தெடுத்து கண்ணதாசன் விருது வழங்கி சிறப்பித்து வருகின்றன.

இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் கோவையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கண்ணதாசன் கழக உறுப்பினர் எம்.குணசேகரன் வரவேற்றார். கவிஞர் மரபின் மைந்தன் முத்தையா, கவிஞர் கண்ணதாசன் விருது குறித்து பேசினார். ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவன தலைவர் ம.கிருஷ்ணன் விழாவுக்கு தலைமை தாங்கி, எழுத்தாளர் போகன்சங்கர், இசையமைப்பாளர் சங்கர் கணேஷ் ஆகியோருக்கு கண்ணதாசன் விருதை வழங்கி கௌரவித்தார். விருதுடன் இருவருக்கும் தலா ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசு, பாராட்டுப் பட்டயம் வழங்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, கவிஞர் ரமணன், எழுத்தாளர் சுகா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். எழுத்தாளர் தேவசீனிவாசன் நன்றி கூறினார்.

# மாவட்டத்தில் மேலும் 130 பேருக்கு கரோனா



**கோவை, அக். 18:** கோவை மாவட்டத்தில் புதிதாக மேலும் 130 பேருக்கு கரோனா தொற்று திங்கள்கிழமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 45 ஆயிரத்து 99 ஆக உயர்ந்துள்ளது. கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 79 வயது முதியவர் உயிரிழந்தார். இதன் மூலம் கோவையில் கரோனா தொற்றுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 2,383 ஆக உயர்ந்துள்ளது.

அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள், கரோனா சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்று வந்த 154 பேர் குணமடைந்து திங்கள்கிழமை வீடு திரும்பினர்.

கோவையில் இதுவரை 2 லட்சத்து 41 ஆயிரத்து 188 பேர் கரோனாவில் இருந்து குணமடைந்துள்ளனர். தற்போது 1,528 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

# கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்

**வால்பாறை, அக்.18 :** வால்பாறையில் மனித உரிமை கழகம் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு முகாமில் கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு மனித உரிமை கழகத்தின் தேசிய தலைவர் முஸ்தபா பட்டாம்பி தலைமை வகித்தார். சட்ட ஆலோசகர் வழக்குரைஞர் ஷாநவாஸ் கான் முன்னிலை வகித்தார். கரோனா தொற்று பரவாமல் இருக்க கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, கரோனாவால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் வால்பாறை வட்டார அனைத்து வணிகர் அமைப்பின் நிர்வாகிகள் சௌந்திரபாண்டியன், பாபுஜி, ஷாஜு சபீர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பழ மண்டிகளுக்கு மாற்று இடம் வழங்க வேண்டும்

## வியாபாரிகள் கோரிக்கை

**கோவை, அக். 18:** கோவையில் நெருக்கடியான பகுதிகளில் செயல்பட்டு வரும் பழ மண்டிகளுக்கு மாற்று இடம் வழங்க வலியுறுத்தி வியாபாரிகள் ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

கோவை ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் ஜி.எஸ்.சமீரன் தலைமையில் பொது மக்கள் குறைகேட்புக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் மனுக்கள் அளித்தனர்.

கோவை மாவட்ட பழ வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

கோவை, கருப்பக் கவுண்டர் வீதி, பவிழம் வீதி, பெரியகடை வீதி, முத்து விநாயகர் கோயில் வீதி ஆகிய பகுதிகளில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக பழ மண்டிகள் செயல்பட்டு வருகின்றன. வெளியூர், வெளி மாநிலங்களில் இருந்து பழ வகைககள் கனரக வாகனங்கள் மூலம் கொண்டுவரப்படுகின்றன. இதனால் காலை நேரங்களில் கனரக வாகனங்களின் போக்குவரத்து அதிகமாக காணப்படுகிறது. தவிர இப்பகுதிகளில் காலையிலே பொதுப் போக்குவரத்தும் அதிகரிப்பதால் பழங்களை இறக்குவதில் பெரும் சிரமம் ஏற்படுகிறது. இதை தவிர்க்க மாநகராட்சிப் பகுதியிலே இட நெருக்கடியில்லா பகுதிகளில் பழ மண்டி அமைக்க மாற்று இடம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை வசதிகள் கோரி காரமடை, புத்தர் நகர் மக்கள் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது: காரமடை பேரூராட்சி, புத்தர் நகர் பகுதியில் 287 குடும்பங்கள் வசித்து வருகிறோம். அனைவரும் ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 1996 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் நலத் துறை சார்பில் இலவச வீட்டுமனை பட்டா வழங்கிய பின் இந்நகர் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இன்று வரை எங்களுக்கு தார்சாலை, தெருவிளக்கு, குடிநீர் இணைப்புகள், கழிப்பறைகள் உள்பட எந்தவிதமான அடிப்படை வசதிகளும் செய்துதரப்படவில்லை. எனவே எங்கள் பகுதிக்கு உரிய அடிப்படை வசதிகள் செய்துத்தர வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிணற்றில் தவறி விழுந்தவர் உயிருடன் மீட்பு

**அன்னூர், அக் . 18 :** அன்னூர் அருகே கிணற்றில் தவறி விழுந்தவரை தீயணைப்பு வீரர்கள் திங்கள்கிழமை உயிருடன் மீட்டனர்.

அன்னூர் அருகே உள்ள மசக்கவுண்டன்செட்டிபாளையம் பகுதியைச் சேர்ந்தவர் ரமேஷ்குமார் (48). இவர் தனது வீட்டின் அருகே உள்ள தண்ணீர் இல்லாத கிணற்றில் திங்கள்கிழமை தவறி விழுந்தார். இது குறித்து அருகில் இருந்தவர்கள் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். அன்னூர் தீயணைப்பு நிலைய அலுவலர் செல்வமோகன் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு சென்று கிணற்றில் விழுந்த ரமேஷ்குமாரை உயிருடன் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து அன்னூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# கோவையில் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் உறவினர் வீட்டில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் சோதனை

**கோவை, அக். 18:** கோவையில் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் உறவினர் வீடு உள்ளிட்ட 2 இடங்களில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் திங்கள்கிழமை சோதனையிட்டனர்.

கோவை, ராமநாதபுரம்– நஞ்சுண்டாபுரம் சாலை எஸ்.என்.வி. கார்டன் பகுதியில் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் மனைவி ரம்யாவின் தந்தைக்கு சொந்தமான வீடு உள்ளது. இந்த வீட்டில் திங்கள்கிழமை காலை 6 மணி முதல் 5 பேர் கொண்ட லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் சோதனை மேற்கொண்டனர். பாதுகாப்புக்காக வீட்டுக்கு வெளியே போலீஸார் நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சோதனையில் சில முக்கிய ஆவணங்கள் சிக்கியதாக லஞ்ச ஒழிப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேலும் வீட்டில் இருந்த நகைகளின் மதிப்பைக் கணக்கிட நகை மதிப்பீட்டாளர்கள் வரவழைக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டது.

இதேபோல பீளமேடு கிருஷ்ணம்மாள் கல்லூரி எதிரே உள்ள தனியார் கட்டடத்தில் 4ஆவது தளத்தில் உள்ள அலுவலகத்திலும் லஞ்ச ஒழிப்பு போலீஸார் சோதனை மேற்கொண்டனர். காலை 6.30 மணிக்கு தொடங்கிய இந்த சோதனை இரவு 10 மணி வரை நடைபெற்றது.

# டெங்கு பணிகளைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்

## ஆணையர் அறிவுறுத்தல்



கோவை கரும்புக்கடை பகுதியில் பாதாள சாக்கடை சீரமைப்பு பணியை ஆய்வு செய்கிறார் மாநகராட்சி ஆணையர் ராஜகோபால் சுன்கரா.

**கோவை, அக். 18:** கோவையில் மழை பெய்து வரும் நிலையில் டெங்கு நோய்த் தொற்று பரவ வாய்ப்புள்ளதால் தடுப்பு பணிகளை தீவிரப்படுத்த தூய்மைப் பணியாளர்களுக்கு மாநகராட்சி ஆணையர் ராஜகோபால் சுன்கரா அறிவுறுத்தியுள்ளார்.

கோவை கரும்புக்கடை, சாரமேடு பாத்திமா நகர் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாக்கடை கால்வாய் தூர்வாரும் பணிகளை மாநகராட்சி ஆணையர் ராஜகோபால் சுன்கரா திங்கள்கிழமை ஆய்வு செய்தார். பருவ மழை தீவிரமடைந்துள்ளதால் பொது இடங்களில் உள்ள தேங்காய் ஓடுகள், பழைய டயர்கள், ஆட்டுக்கல் போன்றப் பொருள்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கொசுப்புழு உற்பத்தி பகுதிகளை கண்டறிந்து தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும். பள்ளிகள், கல்லூரிகள், திரையரங்குகள், மருத்துவமனைகள், வணிக வளாகங்களில் ஆய்வு செய்து கொசுப்புழு உற்பத்தியை கட்டுப்படுத்த வேண்டும். பொது மக்களிடம் டெங்கு தடுப்பு பணிகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மாநாகராட்சி முழுவதும் கொசு உற்பத்தியை கட்டுப்படுத்தி டெங்கு தடுப்பு பணிகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று தூய்மைப் பணியாளர்களுக்கு மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தினார்.

# பெட்ரோல், டீசல் விலை உயர்வு: வரும் 30இல் போராட்டம்



**ஈரோடு, அக். 18:** பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து அக்டோபர் 30ஆம் தேதி போராட்டம் நடத்தப்படும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழு கூட்டம் ஈரோட்டில் இரண்டு நாள்கள் நடைபெற்றது.

நிறைவு நாளான திங்கள்கிழமை கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

தமிழகத்தில் 9 மாவட்டங்கள் மற்றும் பிற மாவட்டங்களில் காலியாக இருந்த ஊரக உள்ளாட்சிப் பதவிகளுக்கான தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணிக்கு மகத்தான வெற்றியை தேடித் தந்த வாக்காளர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பதவியேற்ற பிறகு தேர்தல் வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றி உள்ளார். இதற்கான ஜனநாயக அங்கீகாரம்தான் உள்ளாட்சித் தேர்தல் வெற்றி என்பது.

தமிழகத்தில் நீண்டகாலமாக நடத்தப்படாமல் உள்ள நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் டிசம்பர் இறுதிக்குள் நடத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் தலைவர்களை மக்களே நேரடியாக வாக்களித்து தேர்ந்தெடுக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வரும் வகையில், சட்டப் பேரவையில் சட்ட மசோதா நிறைவேற்ற வேண்டும்.

மத்திய அரசு மக்கள் நலனில் சிறிதும் கவலை இல்லாமல் பெட்ரோல், டீசல் விலையை நாள்தோறும் உயர்த்தி வருவதைக் கண்டித்து மத்திய அரசுக்கு எதிராக அக்டோபர் 30ஆம் தேதி ஒன்றிய, நகர, மாவட்டத் தலைநகரங்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மிதிவண்டி பேரணி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நிலவிவரும் ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச் சட்டம் நிறைவேற்ற வேண்டும். ஆசிரியர் தேர்வு வாரிய மூலம் நடத்தப்படும் தகுதித் தேர்வை எழுதுவதற்கான வயது வரம்பை நீக்க வேண்டும் என்றார்.

Craftsman AUTOMATION

கிராஃப்ட்ஸ்மேன் ஆட்டோமேஷன் லிமிடெட்

CIN - L28991TZ1986PLC001816

பதிவு அலுவலகம்: "செந்தில் டவர்ஸ்" 4வது தளம், 1078, அவிளாசி ரோடு, கோயம்புத்தூர் - 641 018, தமிழ்நாடு
தொ.பே.: 0422 - 7165000, ஃபேக்ஸ்: 0422 - 7165056, வலைதளம்: www.craftsmanautomation.com,
மின்னஞ்சல்: investor@craftsmanautomation.com

1. செப்டம்பர் 30, 2021-ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டு இறுதிக்கான கிராஃப்ட்ஸ்மேன் ஆட்டோமேஷன் லிமிடெட்டின் தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை முடிவுகளில் இருந்து எடுக்கப்பட்டது.

(பிரதி பங்கிற்கான தரவு தவிர ரூ. லட்சத்தில்)

| வ. எண் | விவரக் குறிப்புகள் | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த அரையாண்டு | | முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| | | 30-செப்-2021 | 30-ஜூன்-2021 | 30-செப்-2020 | 30-செப்-2021 | 30-செப்-2020 | 31-மார்ச்-2021 |
| | | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயல்பாடுகளில் இருந்து மொத்த வருவாய் | 57,101 | 43,519 | 37,072 | 1,00,620 | 53,372 | 1,55,995 |
| 2 | நிகர லாபம் / (இழப்பு) (வரி மற்றும் விதி விலக்களிக்கப்பட்ட வகைகளுக்கு முன்னர்) | 7,654 | 3,657 | 3,442 | 11,311 | 992 | 14,876 |
| 3 | நிகர லாபம் / (இழப்பு) (வரிக்கு முன்னர், விதிவிலக்களிக்கப்பட்ட வகைகளுக்கு பின்னர்) | 7,654 | 3,657 | 3,442 | 11,311 | 992 | 14,876 |
| 4 | நிகர லாபம் / (இழப்பு) (வரி மற்றும் விதி விலக்களிக்கப்பட்ட வகைகளுக்குப் பின்னர்) | 4,996 | 2,407 | 2,283 | 7,403 | 660 | 9,736 |
| 5 | மொத்த அனைத்தடக்க வருவாய் [இக்காலத்திற்கான வரிக்குப் பின் நிகர லாபம்/ (இழப்பு) மற்றும் வரிக்குப் பிந்தைய ஏனைய விரிவான வருமானமும் உள்ளிட்டது] | 5,140 | 2,382 | 2,349 | 7,522 | 524 | 10,221 |
| 6 | பங்கு முதலீடு | 1,056 | 1,056 | 1,006 | 1,056 | 1,006 | 1,056 |
| 7 | தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பின்படி காப்பு நிதி மறுமதிப்பீட்டு காப்பு நிதி நீங்கலாக | | | | | | 90,345 |
| 8 | பிரதி பங்கு வருமானம் அடிப்படை மற்றும் நீர்த்தது (முக மதிப்பு ரூ. 5/-) (முழு ஆண்டு தொகையாக கணிக்கப்பெறாமல்) - அடிப்படை ரூ. | 23.65 | 11.39 | 11.35 | 35.04 | 3.28 | 48.32 |
| | - நீர்த்தது ரூ. | 23.65 | 11.39 | 11.35 | 35.04 | 3.28 | 48.32 |

2. செப்டம்பர் 30, 2021-ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டு இறுதிக்கான கிராஃப்ட்ஸ்மேன் ஆட்டோமேஷன் லிமிடெட்டின் தணிக்கை செய்யப்படாத தனிப்பட்ட நிதிநிலை முடிவுகளில் இருந்து எடுக்கப்பட்டது.

(பிரதி பங்கிற்கான தரவு தவிர ரூ. லட்சத்தில்)

| வ. எண் | விவரக் குறிப்புகள் | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த அரையாண்டு | | முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| | | 30-செப்-2021 | 30-ஜூன்-2021 | 30-செப்-2020 | 30-செப்-2021 | 30-செப்-2020 | 31-மார்ச்-2021 |
| | | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயல்பாடுகளில் இருந்து மொத்த வருவாய் | 56,884 | 43,165 | 36,676 | 1,00,049 | 52,615 | 1,54,629 |
| 2 | வரிக்கு முந்தைய லாபம் | 7,586 | 3,509 | 3,647 | 11,095 | 1,106 | 14,756 |
| 3 | வரிக்கு பிந்தைய லாபம் | 4,941 | 2,284 | 2,498 | 7,225 | 795 | 9,676 |
| 4 | மொத்த அனைத்தடக்க வருவாய் | 5,138 | 2,181 | 2,533 | 7,319 | 597 | 10,112 |

3. மேற்கூறியவை செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015 இன் ஒழுங்குமுறை 33 இன் கீழ் அக்டோபர் 18, 2021 இல் பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சாரம் ஆகும். காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான நிதி முடிவுகளின் முழு வடிவம் நிறுவனத்தின் வலைத்தளமான www.craftsmanautomation.com மற்றும் பங்குச் சந்தையின் வலைத்தளங்களில் அதாவது www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகியவற்றில் கிடைக்கின்றன.

கிராஃப்ட்ஸ்மேன் ஆட்டோமேஷன் லிமிடெட்-காக

தேதி: அக்டோபர் 18, 2021
இடம்: கோயம்புத்தூர்

சீனிவாசன் ரவி
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்

# சத்தியமங்கலத்தில் சம்பங்கிப் பூ விலை கடும் வீழ்ச்சி



சம்பங்கிப் பூக்களை குப்பையில் கொட்டும் விவசாயி.

**சத்தியமங்கலம், அக். 18:** சத்தியமங்கலம் பூ மார்க்கெட்டில் ரூ. 200 முதல் ரூ. 300 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த சம்பங்கிப் பூ கிலோ ரூ. 10ஆக விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் சுற்று வட்டாரப் பகுதிகளான சிக்கரசம்பாளையம், பெரியகுளம், புளியங்கோம்பை, அரியப்பம்பாளையம், அய்யன்சாலை உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பங்கி பயிரிடப்பட்டுள்ளது.

இங்கு விளையும் சம்பங்கிப் பூக்கள் கோவை, ஈரோடு, திருப்பூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு நகரங்களுக்கும், கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜையையொட்டி கடந்த சில நாள்களாக சம்பங்கிப் பூ கிலோ ரூ. 200 முதல் ரூ. 300 வரை விற்பனையான நிலையில் தற்போது விசேஷ நாள்கள் முடிவடைந்ததால் விலை வீழ்ச்சியடைந்தது.

இந்நிலையில், சம்பங்கிப் பூ கிலோ ரூ. 10க்கு மட்டுமே விற்பனையானது. இதன் காரணமாக சம்பங்கிப் பூக்களைப் பறிக்கும் தொழிலாளர்களுக்கு கூலி கூட வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

விற்பனையாகாத ஒரு டன் பூக்களை விவசாயிகள் குப்பையில் கொட்டினர். இப்பகுதியில் வாசனை திரவிய ஆலைகள் அமைத்து பூக்களைக் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.